



ஸ்ரீ விநயகா பிக்சர்ஸ்

# இரத்னபுரி இளவரசி

டைரக்ஷன்
ராமண்ணா

B. S.

# இரத்தினபுரி இளவரசி



## கதைச் சுருக்கம்

ஹ......ஹ......நான் தான் ராஜாதி ராஜ, ராஜ கம்பீர......நந்திவர்மன் !... இரத்தினபுரி மன்னன் மார்த்தாண்டனின் மைத்துனன்.........மன்னனின் இளைய மனைவியான ஊர்மிளாவின் அண்ணன்! மேலும்......ஏய்......என்ன நானே பேசிக்கொண்டே போனால்...... உண்மையைச் சொல்.........நீ யார் ?

மனசாட்சி :—நானா, நான்தான் உனது மனசாட்சி!......... உனது மூச்சிலே பிறந்து......எண்ணத்திலே கலந்து............ ஒவ்வொரு அசைவையும் ஆராயும்......மனசாட்சி.........! சொல் ......சொல்...இந்த உலகில் என்னேன்ன செய்கிறாய்? ஈந்து வருகிறாயா? இசைபட வாழ்ந்து வருகிறாயா? இந்த உலகம் உன்னை என்றென்றும் மறக்காதிருக்குமா?

நந்தி :—ஆமாம், ஆமாம். இந்த உலகம் என்னை மறக்கவே முடியாது! இரத்தினபுரியின் ஒவ்வொரு அணுவும் என்னைப் பற்றியே பேசும்! மன்னனின் மூத்த ராணியான லட்சுமி தேவியையும் அவளது அருமையான பெண் குழந்தையையும் நாட்டை விட்டே ஓட்டி விட்டேன்...... எங்களுக்கு உதவி செய்த போய்ச் சாமியாருக்த எனது தங்கை பொன் கொடுத்து வாழ்த்த, நானும் என் சிஷ்யனும் அவன் திறமையைக் கூறி மகிழ, அப்போது எங்கள் தனி அறைவழியாக வந்த மன்னன் ......அதைக் கேட்டதும் எங்களைப் பாய்ந்து பிடித்து...... கைதுசெய்து.........சிறையில் தள்ளி விட்டான்!

மனசாட்சி :—அப்பாடா, சபாஷ். உண்மைக்கு வெற்றி...... உயர்வுக்கு வெற்றி......

நந்தி :—ஏய். மூடா......நான் எப்போதோ தப்பி விட்டேன்

மன :—ஆ!......

நந்தி :—ஆம், சிறையிலிருந்து தப்பிய நான் பதினைந்து ஆண்டுகள் அலைந்தேன்! அலைந்த நான் நாகவல்லி......என்ற நாட்டிய நடனக்காரியை ஒரு போட்டியில் வென்று அடிமையாக்கினேன்! குறுக்கு வழியில் வாழ நினைத்த எனக்கு மலைப்பட்டி என்ற ஊர் சிக்கியது? ஒன்று மறியாத அப்பாவியான மலைப் பட்டி மக்களை ஏமாற்றி என்னை சகல சக்தி வாய்ந்த ஜம்புரிஷி என்றும், நாகவல்லியைக் கன்னிதேவி என்றும் கூறி ஏமாற்றினேன்! வேட்டை! வேட்டை! சரியான வேட்டை! ஆனால் அங்கும் எனக்கு ஒரு எதிரி தோன்றினான்! வேலன் என்ற பெயருடைய அவனை பாபி என்று கூறி ஊரை விட்டே விரட்டினேன்.......இருந்தாலும்.........

மனசாட்சி :—ஏன்.........இழுக்கிறாய்......அவனைக் கொலை செய்ய வில்லையே என்று வருத்தபபடுகிறாயா?

நந்தி :—கொலையும் செய்தேன் ஆனால் அவனை அல்ல! அவனுக்கு உதவியாக வந்த ஒரு புத்த பிட்சுவை!

மன :—அட காதகனே! புத்த பிட்சு என்றாலே! சாந்த சொரூபி......என்று அர்த்தமாயிற்றே!

நந்தி :—அந்தக் கொலையிலேதான் எனது நிலை மேலும் அமோகமாக வளர்ந்து விட்டது! அவனைக் கொலை செய்த எனது சிஷ்யன், அந்த புத்த மடத்தருகே லட்சுமி தேவியைக் கண்டானாம்!

மன :—ஆ......லட்சுமி தேவியா......மன்னனின் மூத்த ராணியா?......

நந்தி :—ஆம், இரத்தினபுரியை விட்டுப் பிரிந்த அவளை இடையில் உதவுவதாக ஏமாற்றிய வண்டிக்காரன் ஒருவன் சூழ்ச்சியிலே சிக்கி குழந்தையை பிரிய நேரிட்டதாம். குழந்தையை அந்தப் புத்த பிட்சு எடுத்து வளர்த்திருக்கிறான். குழந்தையை இழந்த லட்சுமி பல ஆண்டுகள் பைத்தியம்போல் அலைந்து முடிவிலே தற்கொலை செய்துகொள்ள ஆற்றில் குதித்தபோது...... இந்தப் பராரி வேலனும்......அவன் செய்த உதவி ஒன்றால் உயிர் தப்பி அவன்மேல் அன்பு வைத்த குமுதா என்ற பிட்சுவினால் வளர்க்கப்பட்ட லட்சுமியின் மகளும்......அவளைக் காப்பாற்றி இருக்கிறார்கள்.

மன :—ஆஹா. தாயை சேய் காப்பாற்றி இருக்கிறது...... என்ன ரத்தபாசம்.

நந்தி :ஆஹா என்று வாயைப் பிளக்காதே ! லட்சுமிதேவியே புத்த பிட்சுவை கொன்ற கொலைகாரி என்று தீர்மானிக்கப் பட்டாள். மகளாலே மன்னித்து துரத்தப்பட்டாளாம். துரத்தப் பட்டவள் என்னிடத்திலே சிக்கிவிட்டாள்.—இறந்துவிடட மார்த் தாண்டன் தனது மகளுக்கு மணிமுடியை சூட்டச் சொல்லி இருக் கிறுன். எனது சிஷ்யனை அனுப்பி அதையும் அறிந்துகொண் டேன். அறிநத நான் அடுத்த அம்பை எய்தேன் ! அதன் விளைவு, குமுதாவும் என்னிடம் சிக்கிவிட்டாள். எனது கடைசித் திட்டம் உதயமானது நாகவல்லியை லட்சுமி தனது மகளென்று கூறி இரத்தினபுரி மணிமுடியை வாங்கித்தரச் சொல்லப் போகிறேன். மறுத்தால்—குமுதாவை சித்ரவதை செய்வேன் தாய் தாள் பணிவாள். காரியம் முடிந்ததும், இரத்தினபுரி இளவரசியாக நாகவல்லி ஆனதும்,— இருவரையும் கொல்லப் போகிறேன். காணுத இன்பத்தை காணப்போகிறேன்.

மன :—ஒருகாலும் உன் திட்டம் நிறைவேற விடமாட் டேன். விஸ்வரூப மெடுத்து உன்னைத் தடுப்பேன். ஓயாமல் என் கடமையை அறிவுறுத்தி உன்னை ஒழித்து விடுவேன்.

நந்தி :—சட் ! இனியும் உன்னிடம் பேசி நேரத்தை வீணுக்க மாட்டேன். ஒழிகிறேனு......அல்லது ஒய்யாரமாக வாழப் போகிறேனு என்பதை நீயே வந்து பார்த்துக்கொள்......... ஹ......ஹ......ஹ......

# இரத்னபுரி இளவரசி பாடல்கள்

## பாட்டு 1

பாடியவர்கள்: திருச்சி லோகநாதன், ஏ. பி. கோமளா, குழு

தொகையறு

செங்கோல் நிலைக்கவே செல்வம் செழிக்கவே
சிந்தையெல்லாம் மகிழவே
மங்கையர்க் குலக்கொடி வந்தே பிறந்தனள்
வளர் நீதி தழைத் தோங்கவே!

**பல்லவி**

மகுடம் காக்க வந்த மகள் வாழி - குலமகள் வாழி - ஒளி
மங்காத வெங்குடைப் புகழ் வாழி - அன்பு நிழல் வாழி (ம

**சரணம்**

அகிலம் போற்றும் தமிழறம் வாழி!
அள்ளி வழங்கும் மணிக்கரம் வாழி!
அன்பு நிறைந்திடும் மனம் வாழி! - கதிர்
ஆடி விளைந்திடும் நிலம் வாழி! - நீர்வளம் வாழி! (ம
ஆளப் பிறந்தது பெண்ணரசு - அது
வாழ நினைத்துக் கொண்டாடிடுவோம்!
காலத்துக்கும் நம்ம யோகத்துக்கும் நன்றி
கலந்திட கும்மி பாடிடுவோம்!
துள்ளித் திரியுது உள்ளமெல்லாம் - அதைச்
சொல்லித் திரியுது எண்ணமெல்லாம்!
செல்வக் குமரி தெரிசனம் காணவே
தேடித் திரியுது கண்களெல்லாம்!
கத்தும் கடல் கொடுத்த முத்துச் சரம் தொடுத்த
சித்திரத் தொட்டிலிலே மலர்போலே - எழில்
சிந்துகின்றாளிவள் விழியாலே!
இத்தனை நாள் பொறுத்துப் பத்தினி யீன்றெடுத்த
முத்திரைத் தங்கம் இனி முறைபோலே - நலம்
பெற்றிட வளர்வாள் பிறைபோலே!

## 2

பாடியவர்: ஜமுனாராணி

அன்னத் தீவின் அழகு ராணி நான்
கண்ணைக் கவரும் வண்ணமேனி தான்
என்னைக் கொண்டால் இன்பம் காணலாமே (அன்ன
உல்லாச நேரம் வந்து பொல்லாத காதல் போதை தந்து
உன்னோடு பேசு மோகம் கொண்டு உள்ளம் வாடுதே (உ

3

பாடியவர்: பி. லீலா

மாந்தோப்பு வீட்டுக்காரி மானேடும் நாட்டுக்காரி
ஏ மச்சான் - வா மச்சான் ஒன்னைப் பாத்து
மாருத ஆசை வச்சேன் (மாந் தோப்பு)
பொல்லாத அத்தை மவன் புலியோட சண்டை போட்டான்
இல்லாத ஆசைகாட்டி எம்மேலே கண்ணைப் போட்டான்
வில்லெடுத்து மச்சான் வேட்டைக்குப் பயணம் வச்சான்
சொல்லாமெ ஓடி வந்தேன் - என் ஷோக்கு மச்சான்
ஏ மச்சான் - வா மச்சான்
ஒன்னைத்தான் தேடி மனம் வாடி வந்தேன் (மாந் தோப்பு)

4

பாடியவர்: ஜானகி

பார் முழுதுமே நமது பேர் புகழுமே - நம்
பேரழகிலே இதயமே மகிழுமே
காவினில் விளையாடும் காதலர் நிலையாவும்
காணப் பெரு மோகந் தரும் ஆனந்தமே
சேல் விழியாலே - இனி தேன் மொழியாலே - நமது
யாழ் ஒலியிலே - விளையும் பேரின்பமே (பார்)

5

பாடியவர்கள்: சௌந்தரராஜன், சுசீலா

புத்தம் சரணம் கச்சாமி தர்மம் சரணம் கச்சாமி
சங்கம் சரணம் கச்சாமி
குழந்தை வளர்வது அன்பிலே - நல்ல
குணங்கள் அமைவது பண்பிலே (குழந்தை)
ஆடி நடந்திடும் ஆசையிலே - அது
ஓடித் தவழ்வது மண்ணிலே!
ஆகாய நிலவின் அசைந்தாடும் மலரின்
அழகையும் காண்பது கண்ணிலே - பெரும்
ஆனந்தம் அடைவது பண்ணிலே! (குழந்தை)
கொஞ்சும் குரலும் பிஞ்சு விரலும்
குளறிப் பேசும் நிலையும் மாறி
அஞ்சும் மனமும் நாணமும் வந்து
ஆடையணிந்திடும் அறிவும் வந்து
நாளும் நகர்ந்துமே ஓடவே - கல்வி
ஏடும் நகர்ந்திடும் கூடவே! (குழந்தை)

காலத் தாமரை போலத் தோன்றும் நிறமாகியே
வானத் தாரகை நாணத் தோன்றும் முகமாகியே
வஞ்சிக் கொடிதனை மிஞ்சித் திகழும் வடிவாகியே
வண்ணத் தங்கம் மங்கத் திகழும் வயதாகியே
அறிவாகியே—ஒளியாகியே—தெளிவாகியே

## 6

பாடியவர்: பி. சுசீலா

அன்புத் திருமணியே அக மலரே
அருள் மணமே அறமே போற்றி!
புணபட்டு உழலுகின்ற
புவி திருத்த அவதரித்த பொருளே போற்றி!
கண் பெற்றும் பார்வை பெறு
வம்பர்க்கும் வாழ்வளித்த வாழ்வே போற்றி!
இன்புற்றிட மாந்தர் இதயம் ஒளியாக
எழுந்த புத்தமுதே போற்றி!

## 7

பாடியவர்: ஜமுனாராணி

ஐபா - ஈனுடும் நாடகம் ரகசியந்தான் - போடும்
நடையெல்லாம் நடனந்தான் சிங்காரந்தான் - இதை
ரசிக்காத ஆளிருந்தால் அதிசயந்தான்! (ஐயா)
என்னைக் கண்டாலே ஆனந்த லோகம் - உங்கள்
கண்முன்னே தான் வந்து போதம் - ரெண்டு
கண்ணாலே யோகந்தான் முன்னாலே மோகந்தான்
பெண்ணாலே தானின்ப வாழ்வே! (ஐயா)
ஆண்கள் கொண்டாடும் பெண்ணென்ற கோயில்
அன்பு குடி கொள்ளும் பேரின்ப வாசல் - கண்டு
ஆடாத ஆளில்லை பேசாத வாயில்லை
படாத ஏடில்லை பாரில்! (ஐயா)

## 8

பாடியவர்: பி. சுசீலா

ஆடு மயிலே நீ ஆடு மயிலே
ஆனந்த நடனம் ஆடு மயிலே! (ஆடு)
பாடு குயிலே இசை பாடு குயிலே
அன்பு வாழ இன்பம் சூழ - அகமதில்
அமைதி பெருகி நிலை பெறவே! (ஆடு)

ஆடாதே நீயும் ஆடாதே - வீண்
ஆணவக் குரங்கே ஆடாதே
பாடாதே சத்தம் போடாதே - கொடும்
பார்வை ஆசைதையே பாடாதே!
வாடாதே முகம் வாடாதே
வண்ண மலரே வாடாதே!
வழக்கமான பூசை முடியுமுன்னே - மறந்தும்
இதழை மூடாதே! (வாடாதே)
ஓடாதே மானே ஓடாதே - நீ
ஓடும் வழி தவறி ஓடாதே!
வேடன் வலையிலும் சிங்கத்தின் வாயிலும்
விருந்தாய் விழுந்து விடாதே! (ஓடாதே)

## 9

பாடியவர்: ஜமுனாராணி குழுவினர்

தேவி மனம்போலே சேவை புரிந்தாலே
தேவை நிறைவேறும் பாவ வினை தீரும்! (தேவி)
யோக நிலையாலே தேவ மொழியாலே
மாயா வழி காணும் ஞான மருள் வாளே! (தேவி)
வானில் உலாவும் வண்ண நிலாவும்
நாணம் கொள்ளும் நங்கையாள்
ஆடல் விநோத ஆனந்த கீத
பாடம் சொல்லும் மங்கையாள்
அழகு வரும் நேரம் அன்னை அதிகாரம்
முழுதும் அவள் பாரம் மோகம் வெகு தூரம்! (தேவி)

## 10

பாடியவர்: டி. ஆர். மகாலிங்கம்

தொகையறு

கல்லால் இதயம் வைத்து கடும் விஷத்தால் கண்ணமைத்து
கணக்கில்லாப் பொய்களுக்குக் காரணமாய் நாக்கமைத்து
கள்ள உருவமைத்துக் கன்னக்கோல் கையமைத்து
நல்லவரென்றே சிலரை உலகம் நடமாட விட்டதடா!

பல்லவி

காதலுக்கு நாலு கண்கள் கள்வனுக்கு ரெண்டு கண்கள்
காமுகரின் உருவத்திலே கண்ணுமில்லே காதுமில்லே (காத)

வானில் உலாவும்
வண்ண நிலாவும்
நாணம் கொள்ளும் நங்கையாள்
ஆடல் விநோத ஆனந்த கீத
பாடம் சொல்லும் மங்கையாள் !
அழகு வரும் நேரம்
அன்னை அதிகாரம்
முழுதும் அவள் பாரம்
மோகம் வெகு தூரம் ! (தேவி மனம்)

வேலன் : T. R. மகாலிங்கம்

தொகையரு

கல்லால் இதயம் வைத்து
கடும் விஷத்தால் கண்ணமைத்து
கணக்கில்லாப் பொய்களுக்குக்
காரணமாய் நாக்கமைத்து
கள்ள உருவமைத்துக் கன்னக்கோல் கையமைத்து
நல்லவரென்றே சிலரை உலகம் நட மாட விட்டதடா !

பல்லவி

காதலுக்கு நாலு கண்கள்
கள்வனுக்கு ரெண்டு கண்கள்
காமுகரின் உருவத்திலே
கண்ணுமில்லை காதுமில்லை ! (காதலுக்கு)

சரணம்

நீதியின் எதிரிகளாய் நிலைமாறித் திறிபவர்கள்
பாதையில் நடப்பதில்லை பரமனையும் மதிப்பதில்லை
பாதகம் கொஞ்சமில்லை பண்புமில்லை முறையுமில்லை
பேதைப் பெண்கள் இதை பெரும்பாலும் உணர்வதில்லை
(காதலுக்கு)

பேதம் இல்லை என்பார்
வேதாந்தம் பேசிடுவார்
பெற்றவளைத் தாயென்பார்
மற்றவளைப் பேயென்பார்
காதல் அறம் என்பார்
கற்பின்விலை என்னவென்பார்
கண்மூடி மாந்தர் இதை
கடைசீவரை அறிவதில்லை ! (காதலுக்கு)

வேலன், குமுதா: T. R. மகாலிங்கம்
ஜானகி

ஆண் : படிக்க படிக்க நெஞ்சிலினிக்கும்
பருவ மென்ற காவியம்
பார்க்க பார்க்க வளருமே
காதலின்ப ஓவியம் ! (படிக்க படிக்க)

பெண் : ஆ......ஆ......காதல் இன்ப ஓவியம்

ஆண் : அடுக்கடுக்காய் எண்ணம் வரும்
கண்கள் மட்டும் பேசும்.

பெண் : ஆ......ஆ......பேசும்

ஆண் : அன்பு மனம் பொங்கி விட்டால்
அங்கமெல்லாம பேசும் ! (படிக்க படிக்க)

தடுத்தவர்கள் வென்றதில்லே
சரித்திரமே சொல்லும்—காதல்
அடுத்தவர்கள் அறியாமல்
ரகசியமாய் செல்லும் ! (படிக்க படிக்க)

பெண் : காதல் ரகசியமாய் செல்லும்

ஆண் : கள்ளமில்லா காதலரை
வெண்ணிலவும் ஏற்கும்
காட்டில் வாழும் பறவைகளும்
கானம்பாடி வாழ்த்தும்

பெண் . ஆ......ஆ......கானம்பாடி வாழ்த்தும்

ஆண் : தொல்லே தரும் மனித குலம்
சொல்லிச் சொல்லித் தூற்றும்
தூய்மையான உள்ளங்களேச்
சூழ்ந்து நின்று வாட்டும் ! (படிக்க படிக்க)

வேலன்: T. R. மகாலிங்கம்

தொகையரு

ஏனென்று கேட்கவே ஆளில்லே என்பதாலே
தானென்ற அகங்காரம் தலேவிரித்து ஆடுதடா
ஊனுருக ஏழைகளின் உள்ளமெல்லாம் புண்ணுக
உயிரோடு கொல்பவனே காலம் உயர்வாய் மதிக்குதடா !

பல்லவி

பொறுமை ஒரு நாள் பொங்கி எழுந்தால்
பூமி நடுங்குமடா
கொடுமை புரியும் பாதகனை—அவன்
குறைகள் விழுங்குமடா ! (பொறுமை)

சரணம்

காலையாகி மதியமாகி மாலையானது பலபொழுது
மாலையாகி பகலும் முடிந்து இருளில் போனதுபல இரவு.
ஞாலம் முழுதுமே ஆள்கின்ற கதிரோன்
வாழ்வெல்லாம் ஒரு நாள் வாழ்வென்றால்
தினம் தீராத வெறியோடு போராடும் மனிதன்
பேராசை நிலைதன்னை என்னென்று சொல்வேன் !— (பொறுமை)

மானம் என்றே மங்கை அழுதால்
இன்ப மென்றே நகைப்பானே
வால வயதில் செய்த வினையை
வாழ்வு முடிவில் நினைப்பானே !

தானாகச் சிரிப்பான் தானாக அழுவான்
காணாத கனவும் காண்பானே—அவன்
ஆனந்த வாழ்வென்று ஈனங்கள் தேடி
கூனாகி ஊனாகிக் கூடாகிப் போவான் ! (பொறுமை)

பி. சுசீலா

குமுதா:

எங்கே உண்மை என் நாடே
ஏனோ மௌனம் சொல் நாடே
மேலான செல்வம் வீணாகலாமோ
வீழாமல் மீளாயோ ! (எங்கே)


மீறி வரும் குரல் கேளாயோ
வெற்றிவரும் வேகம் பாராயோ
பாராளத் தகுந்தவள் உன் மகளோ
பாதகம் புரிந்திடும் பொய் மகளோ
தாய் வாழ்ந்த வீடும் சாகாத பேரும்
தாழ்ந்தாலுன் கண் தாங்குமோ (எங்கே)

கால முன்னை குறை கூறாதோ
காவியங்கள் யாவும் ஏசாதோ
வாள் வீரம் சூழ்ச்சியை வாழ்த்திடுமோ
போலியை பொம்மையைப் போற்றிடுமோ
தாய் வாழ்ந்த வீடும் சாகாத பேரும்
தாழ்ந்தாலுன் கண் தூங்குமோ......

## டெக்னிஷியன்கள்.

| | | |
|---|---|---|
| ஒளிப்பதிவு | — | T. K. ராஜாபாதர் |
| உதவி | — | K. சாம்பசிவ ராவ் |
| ஒலிப்பதிவு | — | பழனி பாபு |
| பாடல்கள் ஒலிப்பதிவு | — | ரங்கசாமி, ஜீவா, மோஹனசுந்தரம், சிவராம் |
| எடிட்டிங் | — | M. V. ராஜன் & D. துரைராஜன் |
| உடைகள் | — | C. K. கண்ணன் |
| உதவி | — | செல்லையா |
| மேக்கப் | — | ஹரிபாபு, கஜபதி, ரங்கசாமி நவநீதம், மாணிக்கம், தனகோடி, S. D. ஜெயராமன் |
| செட்டிங்ஸ் | — | C. குப்புசாமி நாயுடு K. சீனிவாசன் & T. நீலகண்டன் |
| ப்ராசஸிங் | — | விஜயா லாபரட்டரி V. D. S. சுந்தரம் |
| காட்சி அலங்காரம் | — | R. ஜெயராம் ரெட்டி |
| ஸ்டில்ஸ் | — | பீட்டர் ஜான் |
| ஸ்டண்ட் மாஸ்டர் | — | சோமு |
| ஸ்டண்டுகள் | — | சாரங்கன் & பார்ட்டி |
| புரொடக்ஷன் நிர்வாகம் | — | K. G. விஜயரங்கம் |
| புரொடக்ஷன் மானேஜர் | — | K. ராகவன் |
| ,, உதவி | — | S. வெங்கடேசன் |
| ஸ்டுடியோ புரொகிராம் | — | G. சுந்தரம், C. S. பிரகாஷ் |
| உதவி டைரக்ஷன் | — | K. B. ராமு, ஜெயராமன் |
| ஸ்டுடியோ | — | வாஹினி, விஜயா & விக்ரம் |

நியோ ஆர்ட் அச்சகம், சென்னை-2




கோரஸ் — திருச்சி லோகநாதன்
ஏ. பி. கோமளா & குழுவினர்.

தொகையறு

செங்கோல் நிலைக்கவே செல்வம் செழிக்கவே
சிந்தை யெல்லாம் மகிழவே
மங்கையர் குலக்கொடி வந்தே பிறந்தனள்
வளர் நீதி தழைத்தோங்கவே !

பல்லவி

மகுடம் காக்க வந்த மகள் வாழி—தல
மகள் வாழி—ஒளி
மங்காத வெண்குடைப் புகழ் வாழி—அன்பு
நிழல் வாழி ! (மகுடம்)

சரணம்

அகிலம் போற்றும் தமிழறம் வாழி !
அள்ளி வழங்கும் மணிக்கரம் வாழி !
அன்பு நிறைந்திடும் மனம் வாழி !—கதிர்
ஆடி விளைந்திடும் நிலம் வாழி !—நீர்
வளம் வாழி !— (மகுடம்)

ஆளப் பிறந்தது பெண்ணரசு—அது
வாழ நினைத்துக் கொண்டாடிடுவோம் !
காலத்துக்கும் நம்ம யோகத்துக்கும் நன்றி
கலந்திட கும்மி பாடிடுவோம் !
துள்ளித் திரியுது உள்ளமெல்லாம்—அதைச்
சொல்லித் திரியுது எண்ணமெல்லாம்
செல்வக் குமாரி தெரிசனம் காணவே
தேடித் திரியுது கண்களெல்லாம் !
கத்தும் கடல் கொடுத்த முத்துச் சரந்தொடுத்த
சித்திரத் தொட்டிலிலே மலர்போலே—எழில்
சிந்துகின்றாளிவள் விழியாலே !
இத்தனை நாள் பொறுத்து பத்தினியீன்றெடுத்த
முத்திரைத் தங்கம் இனி முறைபோலே—நலம்
பெற்றிட வளர்வாள் பிறைபோலே !

ஜமுனா ராணி:

அன்னத் தீவின் அழகு ராணி நான்
கண்ணைக் கவரும் வண்ணமேனி தான்
என்னைக் கொண்டால் இன்பம காணலாமே—(அன்னத்தீவு)
உல்லாசமான நேரம் வந்து
பொல்லாத காதல் போதை தந்து
உன்னோடு பேசு மோகம் கொண்டு
உள்ளம் வாடுதே! (உல்லாசமான)

பி. லீலா:

மாந் தோப்பு வீட்டுக்காரி
மா னோடும் நாட்டுக்காரி
ஏமச்சான்—வா மச்சான்
ஒன்னைப் பாத்து மாறாத ஆசை வச்சேன்
(மாந் தோப்பு)

பொல்லாத அத்தை மவன்
புலியோட சண்டை போட்டான்
இல்லாத ஆசை காட்டி
எம்மேலே கண்ணே போட்டான்
வில்லை எடுத்து மச்சான் வேட்டைக்கு
பயணம் வச்சான்
சொல்லாமெ ஓடி வந்தேன்—என்
ஷோக்கு மச்சான்
ஏ மச்சான்—வா மச்சான்
ஒன்னைத்தான் தேடி மனம் வாடி வந்தேன்
—(மாந் தோப்பு)

ஜானகி:

பார் முழுதுமே நமது பேர் புகழுமே—நம்
பேரழகிலே இதயமே மகிழுமே
காவினில் விளையாடும்
காதலர் நிலையாவும்
காணப் பெரு மோகந் தரும் ஆனந்தமே
சேல் விழியாலே—இனி
தேன் மொழியாலே—நமது
யாழ் ஒலியிலே—விளையும் பேரின்பமே! (பார் முழுதுமே)

பின்னணி கீதம்:
(T. M. S.)

T. M. சௌந்தரராஜன்
பி. சுசீலா.

புத்தம் சரணம் கச்சாமி
தர்மம் சரணம் கச்சாமி
சங்கம் சரணம் கச்சாமி!
குழந்தை வளர்வது அன்பிலே—நல்ல
குணங்கள் அமைவது பண்பிலே! (குழந்தை)
ஆடி நடந்திடும் ஆசையிலே—அது
ஓடித் தவழ்வது மண்ணிலே!
ஆகாய நிலவின் அசைந்தாடும் மலரின்
அழகையும் காண்பது கண்ணிலே—பெரும்
ஆனந்தம் அடைவது பண்ணிலே! (குழந்தை)
கொஞ்சும் குரலும் பிஞ்சு விரலும்
குளறிப் பேசும் நிலையும் மாறி
அஞ்சும் மனமும் நாணமும் வந்து
ஆடையணிந்திடும் அறிவும் வந்து
நாளும் நகர்ந்துமே ஓடவே—கல்வி
ஏடும் நகர்ந்திடும் கூடவே! (குழந்தை)
காலத் தாமரை போலத் தோன்றும் நிறமாகியே
வானத் தாரகை நாணத் தோன்றும் முகமாகியே
வஞ்சிக் கொடிதனை மிஞ்சித் திகழும் வடிவாகியே
வண்ணத் தங்கம் மங்கத் திகழும் வயதாகியே
அறிவாகியே—ஒளியாகியே—தெளிவாகியே!

பி. சுசீலா:

அன்புத் திருமணியே அகமலரே
அருள் மணமே அறமே போற்றி!
புண்பட்டு உழலுகின்ற
புவி திருத்த அவதரித்த பொருளே போற்றி!
கண் பெற்றும் பார்வை பெரு
வம்பர்க்கும் வாழ்வளித்த வாழ்வே போற்றி
இன்புற்றிட மாந்தர் இதயம் ஒளியாக
எழுந்த புத்தமுதே போற்றி!

நாகவல்லி:

ஜமுனா ராணி

ஐயா—நானுடும் நாடகம் ரகசியந்தான்—போடும்
நடையெல்லாம் நடனந்தான் சிங்காரந்தான்—இதை
ரஸிக்காத ஆளிருந்தால் அதிசயந்தான்! (ஐயா)

என்னைக் கண்டாலே ஆனந்த லோகம்—உங்கள்
கண் முன்னே தான் வந்து போதம்—ரெண்டு
கண்ணாலே யோகந்தான் முன்னாலே மோகந்தான்
பெண்ணாலே தானின்ப வாழ்வே ! (ஐயா)

ஆண்கள் கொண்டாடும் பெண்ணென்ற கோயில்
அன்பு குடிகொள்ளும் பேரின்ப வாசல்—கண்டு
ஆடாத ஆளில்லை பேசாத வாயில்லை
பாடாத ஏடில்லை பாரில் ! (ஐயா)

குமுதா : பி. சுசீலா

ஆடு மயிலே நீ ஆடுமயிலே
ஆனந்த நடனம் ஆடுமயிலே ! (ஆடுமயிலே)
பாடு குயிலே இசை பாடு குயிலே
அன்பு வாழ இன்பம் சூழ—அகமதில்
அமைதி பெருகி நிலைபெறவே ! (ஆடுமயிலே)
ஆடாதே நீயும் ஆடாதே—வீண்
ஆணவக் குரங்கே ஆடாதே
பாடாதே சத்தம் போடாதே—கொடும்
பார்வை ஆந்தையே பாடாதே !
வாடாதே முகம் வாடாதே
வண்ணமலரே வாடாதே !
வழக்கமான பூசை முடியுமுன்னே—மறந்தும்
இதழை மூடாதே ! (வாடாதே)
ஓடாதே மானே ஓடாதே—நீ
ஓடும் வழி தவறி ஓடாதே !
வேடன் வலையிலும் சிங்கத்தின் வாயிலும்
விருந்தாய் விழுந்து விடாதே ! (ஓடாதே)

கோரஸ் : ஜமுனா ராணி & குழுவினர்

தேவி மனம் போலே
சேவை புரிந்தாலே
தேவை நிறை வேறும்
பாவ வினை தீரும் ! (தேவி மனம்)
யோக நிலையாலே
தேவ மொழியாலே
மாயா வழி காணும்
ஞான மருள் வாளே ! (தேவி மனம்)